# 1 தமிழ் அமுது

தோண்டுகின்ற போதெல்லாம்
சுரக்கின்ற செந்தமிழே!
வேண்டுகின்ற போதெல்லாம்
விளைகின்ற நித்திலமே!
உன்னைத் தவிர
உலகில் எனைக் காக்க
பொன்னோ! பொருளோ!
போற்றி வைக்க வில்லையம்மா!.

– கவிஞர் கண்ணதாசன்




### பாடல் பொருள்

தோண்டுகின்ற பொழுதெல்லாம் ஊற்றைப்போல் சுரக்கின்ற செந்தமிழே! தேவைப்படும் பொழுதெல்லாம் விளைகின்ற முத்தே! உன்னை அன்றி இவ்வுலகில் என்னைக் காக்க வேறு பொன்னையோ பொருளையோ சேர்த்து வைக்கவில்லை, என்னைக் காத்திடுவாய் அம்மா.

KM17BM



## வாங்க பேசலாம்

நீங்கள் நினைப்பதை எவ்வாறு வெளிப்படுத்துவீர்?

உமக்குத் தெரிந்த தமிழ் மொழியின் சிறப்பை வெளிப்படுத்தும் பாடல் ஒன்றைக் கூறுக.



## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. நித்திலம் இச்சொல்லின் பொருள் ..........................

(அ) பவளம் (ஆ) முத்து (இ) தங்கம் (ஈ) வைரம்

2. செந்தமிழ் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................................

(அ) செம்மை + தமிழ் (ஆ) செந் + தமிழ்

(இ) செ + தமிழ் (ஈ) செம் + தமிழ்

3. உன்னை + தவிர என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..............................

(அ) உன்னைத் தவிர (ஆ) உனைத்தவிர

(இ) உன்னை தவிர (ஈ) உனை தவிர

### இப்பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களைத் தெரிவு செய்து எழுதுவோமா...



தோண்டுகின்ற – வேண்டுகின்ற

______________ ______________




## கலைந்துள்ள எழுத்துகளை வரிசைப்படுத்திச் சொல்லை உருவாக்குக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எ.கா | பொ | ள் | ன் | பொ | ரு | பொன்பொருள் |
| 1. | செ | ழ் | மி | த | ந் | |
| 2. | ண | வ | கு | ங் | | |
| 3. | போ | றி | ற் | | | |
| 4. | தி | ம் | த் | ல | நி | |
| 5. | உ | கி | ல் | ல | | |

## மீண்டும் மீண்டும் சொல்லலாமா?









## ஆடிப் பாடி மகிழ்வோம்!

அத்திப்பழத் தேன் எடுப்போம்
ஆலமர விழு தாவோம்
இசையோடு பள்ளி செல்வோம்
ஈகையோடு நட்பு செய்வோம்
உவகையாய்க் கற்றிடுவோம்
ஊர் முழுதும் சுற்றிடுவோம்
எல்லோரும் சேர்ந்திடுவோம்
ஏட்டினிலே பாட்டு செய்வோம்
ஐவகை நிலம் செழிக்க
ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம்
ஓடம் விட்டுக் களித்திடுவோம்
ஔவை மொழி கற்றிடுவோம்
எஃகாய் உறுதி கொள்வோம்



Z8GK56

# உன்னை அறிந்துகொள்

1. எனது நாடு ..........................................
2. எனது மாநிலம் ..........................................
3. எனது மாவட்டம் ..........................................
4. எனது ஊர் ..........................................
5. எனது மொழி ..........................................
6. எனது பள்ளி ..........................................
7. எனது வகுப்பு ..........................................
8. என் ஆசிரியர் ..........................................
9. என் நண்பர்கள் ..........................................
10. வீட்டில் எனக்குப் பிடித்தவை ..........................................
11. பள்ளியில் எனக்குப் பிடித்தவை ..........................................
12. எனது திறமைகள் ..........................................
13. என் பெற்றோர் ..........................................
14. பெற்றோர் அலைபேசி எண் ..........................................

# மொழியோடு விளையாடு

## "தொட்டால் சுருங்கி"

மாணவர்கள் வட்டமாக நிற்க வேண்டும். ஒரு மாணவன் வட்டத்திற்கு வெளியே சுற்றி ஓடி வரவேண்டும். ஓடி வரும் மாணவன் நிற்கின்ற யாராவது ஒரு மாணவன் முதுகில் தொட்டு ஒரு சொல்லைக் கூற வேண்டும். அந்தச் சொல்லில் முடியும் எழுத்தை முதலாகக்கொண்டு வேறு சொல்லைத் தொடப்பட்ட மாணவன் கூற வேண்டும். அவன் சொல்லைக் கூறிவிட்டால் ஓடி வரும் மாணவனே மீண்டும் ஓடி வந்து வேறு மாணவனைத் தொட்டு வேறு சொல் கூற வேண்டும். தொடப்பட்டவன் சரியாகக் கூற வில்லையென்றால் அவன் ஓடிவர வேண்டும். இவ்வாறே விளையாட்டைத் தொடரலாம்.



எ.கா: விலங்கு என்று சொன்னால் குருவி என்று சொல்ல வேண்டும்.



### செயல் திட்டம்

**கேட்டு, எழுதி வரலாமா. . .**
**தமிழ் மொழியின் சிறப்பை வெளிப்படுத்தும் பாடல்கள் இரண்டை எழுதி வருக**